டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

Agridoctor.in | 27.02.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 207 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# தமிழகத்தில் இன்று 9 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, பிப்.26

தமிழகத்தில் இன்று 9 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்று (27.2.25) கடலோர தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், உள்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தஞ்சாவூர், திருவாரூர்,



நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை 28ம் தேதியில் கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தேனி, மதுரை, திண்டுக்கல் தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

1.3.25ல் தென்தமிழகத்தில் அநேக இடங்களிலும், வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்




கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

2.3.25ல் தென்தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# துவரை விதைப்பண்ணைகள் ஆய்வு



கோயம்புத்தூர், பிப்.26

கோவை மாவட்டத்தில் துவரை பயிர் சாகுபடி பரப்பபை அதிகரிக்கவும் துவரை விதைப் பெருக்கத்தை ஊக்கவிக்கவும், அரசு துவரை விதைப் பண்ணைகள் தற்போது சர்க்கார்சாமக்குளம் வட்டாரத்தில் அமைக்கப்பட்டு, முதிர்ச்சி மற்றும் பூப்பூக்கும் பருவத்தி ல்உ ள்ளது. இதனை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் பி.ஆ.மாரிமுத்து ஆய்வு செய்தார்.

சர்க்கார்சாமக்குளம் வட்டாரம் இடிகரை மற்றும் கொண்டம் பாளையம் கிராமங்களில் துவரை கோ-8 இரக விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது. விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் துவரை கோ-8 விதைப்பண்ணைகளை ஆய்வு செய்தார். ஆய்வின் போது பயிர்களின் விலகு தூரம், கலவன்கள் எண்ணிக்கை, மகசூல் கணக்கீடு ஆகியவை மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு குறித்து அவர் கூறுகையில்' துவரை கோ-8 இரகமானது வறட்சியை தாங்கி வளர கூடிய நீண்ட காலத்துப் பயிர் (170-180 நாட்கள்). தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தால் 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. விதைகள் ஒருமித்த பழுப்பு நிறத்திலும், நீள் வட்டமான வடிவத்திலும் சற்று கூடுதல் எடையையும் (1000 விதைகளின் எடை 102.2-114.4கி) கொண்டது. இறவையில் ஏக்டருக்கு 1800 கிலோவும், மானாவாரியில் ஏக்டருக்கு 1600 கிலோவும் மகசூல் தரவல்லது. துவரை விதை உற்பத்தியை பெருக்கிடவும், நல்ல மகசூல் ஈட்டவும் கோ-8, இரகத்தினை பயிரிடவும், களைகள், கலவன்கள் தென்பட்டால் அவற்றை உடனுக்குடன் நீக்கிடவும் அறிவுரை வழங்கினார்.

ஆய்வின் போது, விதைச்சான்று அலுவலர் ப.பிரியதர்ஷினி மற்றும் உதவி விதைஅலுவலர் குமணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# லப்பை குடிக்காடு அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் மண்வள திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு பயிற்சி



பெரம்பலூர், பிப்.26

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மண்வள இயக்கத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டம், லப்பை குடிக்காடு அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு மண்வள மேம்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்டு மாணவர்களிடையே பேசிய பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதா கிருஷ்ணன், மண் மாதிரி ஆய்வின் முக்கியத்துவம் குறித்தும், மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டிய முறைகள் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் மண்வள அட்டைகளை கொண்டு உரம் இடுவதால் மண்ணில் உள்ள சத்துக்களை அறிந்து தேவையான உரங்களை மட்டும் பயன்படுத்தி உரச் செலவினை குறைத்து மகசூல் அதிகமாக பெற முடியும் என்பதை எடுத்துரைத்தார்.




மண்வள அட்டைகளை கொண்டு விவசாயிகள் தங்கள் மண்ணில் உள்ள பிரச்சனைகளை அறிந்து அவற்றை சரி செய்து மண்ணிற்கு தகுந்த பயிர்களை சாகுபடி செய்ய இயலும் என்பதை எடுத்துரைத்தார். மானவர்களுக்கு மண் மாதிரிகள் சேகரிப்பு குறித்தும் மண் மாதிரிகள் ஆய்வு செய்வது குறித்தும் மாணவர்களுக்கு நேரடி பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அரசினர் ஆண்கள் உயர்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் (பொறுப்பு), வேளாண்மை ஆசிரியர் மாதவன், வேளாண்மை அலுவலர்கள் தயாநிதி மற்றும் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 26.02.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 20 | 26 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 20 | 24 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 28 | 32 | 57A | உருளை(ஊட்டி) | 20 | 38 |
| 2 | வெண்டை | 35 | 40 | 58 | மேரக்காய் | 15 | 20 |
| 3 | தக்காளி (நாடு) | 12 | 15 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 26 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 12 | 16 | 60 | கேரட் | 60 | 70 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 30 | 36 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 38 | 44 |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 25 | 30 |
| 7 | பீர்க்கன் | 30 | 34 | 63 | டர்னிப் | 30 | 35 |
| 8 | சுரைக்காய் | 10 | 14 | 64 | மு.கோஸ் | 15 | 20 |
| 9 | பாகற்காய் | 30 | 38 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 25 | 30 | 66 | காளிபிளவர் | 24 | 28 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 65 | 70 |
| 12 | அரசாணி | 14 | 18 | 68 | பூண்டு | 70 | 98 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 28 | 69 | இஞ்சி | 40 | 50 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 30 | 70 | புருக்கோலின் | 90 | 100 |
| 15 | சி.வெங்காயம் | 35 | 38 | 71 | பென்னி பீன்ஸ் | 50 | 54 |
| 16 | பெ.வெங்காயம் | 32 | 36 | 72 | குடமிளகாய் | 44 | 48 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 25 | 73 | ஊட்டி அவரை | 110 | 120 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 50 | | | | |
| 19 | முருங்கை | 70 | 76 | | | | |
| 20 | தேங்காய் | 60 | 64 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 70 | | | | |
| 22 | வாழைக்காய் | 38 | 42 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 48 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 58 | 62 | 75 | எலுமிச்சை | 50 | 60 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 35 | 40 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 75 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 24 | 28 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 120 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காஷ்மீர்) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 70 | 80 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 70 | 74 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 55 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 44 | 48 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 35 | 40 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 18 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 60 | 65 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 16 | 20 | 97 | செவ்வாழை | 95 | 100 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 0 | 0 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 0 | 0 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 75 |
| 52 | புளி | 130 | 140 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கார்ன் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 18 | 22 | | | | |
| 55A | துவரை | 50 | 60 | | | | |

# கரிம வர்த்தகத்தில் சான்றிதழ் பெறும் முறை பயிற்சி

சேலம், பிப்.26

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம், வேளாண்மை துறையின் கீழ் ஆத்மா திட்டத்தில் உள்மாவட்ட அளவில் விவசாயிகள் பயிற்சியில் கரிம வர்த்தகத்தில் சான்றிதழ் பெறும் முறை என்னும் தலைப்பின் கீழ் 40 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சான்றிதழ் பெரும் முறை குறித்து வேளாண்மை வணிக துறையின் வேளாண்மை அலுவலர் காயத்திரி, விவசாயி களுக்கு எடுத்துரைத்தார். மேலும் புதிய தொழில்நுட்ப கையேடு




பயிர் உற்பத்தி செய்து பிறகு சந்தைப்படுத்தும் முறை பற்றியும் சாகுபடிக்கு தேவையான உபகரணங்கள் எவ்வாறு மானிய விலையில் பெறுவது மற்றும் வேளாண்மை துறையில் நடைமுறையில் உள்ள திட்டங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் அப்பகுதியில் உதவி வேளாண்மை அலுவலர் அருள் கலந்து கொண்டார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆகியோர் இணைந்து பயிற்சிக்கான ஏற்பாடுகளை முழுவதாக செய்திருந்தனர்.

மேலும் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN Jain Irrigation Systems Ltd. Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பொள்ளாச்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நெல் விதைப்பண்ணைகளை பதிவு செய்ய விதைச்சான்றளிப்புத் துறை உதவி இயக்குநர் அழைப்பு

கோயம்புத்தூர், பிப்.26

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை கோட்டூர், வேட்டைக்காரன்புதூர், பொங்காலியூர், வடக்கலூர் ஆகிய பகுதியில் தனியார் விதை உற்பத்தியாளர்களால் நெல் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு தற்சமயம் பயிர் பூப்பருவம் எய்தும் நிலையில் உள்ளது. விதைப்பண்ணைகளை பதிவு செய்ய கோவை மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் பி.ஆ.மாரிமுத்து அழைப்பு விடுத்துள்ளார்.

நடப்பு பருவத்திற்கு ஏற்ற ரகங்களான கோ.51, ADT 37 மற்றும் ADT(R) 45, Co-55, ADT-16 அதிகளவில் விதைப் பண்ணைகள் தனியார் விதை உற்பத்தியாளர்களால் அமைக் கப்பட்டுள்ளது. இந்த ரகங்கள் குறுகிய வயதுடையவைகளாகும். விதைச்சான்று நடைமுறையின்படி நெல் விதைப்பண்ணை களை பூப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு விதைச்சான்றளிப்பு உதவி இயக்குநர், விதைச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகம் 1424-A, தடாகம் சாலை, கோவையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

விதைப்பண்ணைகளின் விதைப்பறிக்கைகளை தயார் செய்து SPECS/SATHI இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும் விதைப்பறிக்கைகள் மூன்று நகல்களில் விதை ஆதார அட்டைகள் மற்றும் விற்பனைப் பட்டியலுடன் உதவி இயக்குநர் அலுவலகத்தில் சமர்பித்து, பதிவு கட்டணம் ஒரு விதைப்பறிக்கைக்கு 25 ரூபாயும், வயலாய்வு கட்டணம் ஏக்கருக்கு 100 ரூபாயும், பகுப்பாய்வு கட்டணம் குவியலுக்கு 80 ரூபாயும் விதைப்பறிக்கை பதிவின் போது செலுத்த வேண்டும்.

குறுகிய கால ரக விதைப்பண்ணைகளை விதைச்சான்று அலுவலர்களால் பூப்பருவத்தில் (85ஆவது நாள்) மற்றும் முதிர்ச்சி நிலையில் (95ஆவது நாள்) வயல் ஆய்வு பணி மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வின்போது, விதைப்பு தேதி, ரகம், விதை ஆதாரம், பரப்பு, விலகு தூரம், கலவன் கணக்கீடு, மகசூல் கணக்கீடு செய்தல் போன்ற பணிகள் விதைச்சான்று அலுவலர் களால் மேற்கொள்ளப்படுகிறது.

வயல் தரத்தில் தேரும் விதைப்பண்ணைகள் அறுவடைக்கு அனுமதிக்கப்படுகிறது. அறுவடை முடிந்து மூட்டைகளில் பிடிக்கப் பட்ட வயல் மட்ட விதைக்குவியல் அரசு அங்கீகாரம் வழங்கப்பட்ட, சுத்தி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு சுத்தி பணி செய்யப் படுகிறது. வயல் தரங்களில் தேராத விதைப் பண்ணைகளை தள்ளுபடி செய்யப்படுகிறது. சுத்தி செய்யப்பட்ட விதைக்குவியல் களிலிருந்து விதை மாதிரிகள் எடுத்து அரசு விதைப்பரிசோதனை நிலையத்திற்கு விதை மாதிரிகள் அனுப்பப்பட்டு அங்கு விதை தரங்களான, முளைப்புதிறன் புறத்தூய்மை, ஈரப்பதம், பிற ரகம் கலவன்கள் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்ட பிறகு, விதைத்தரத்தில் தேரும் விதைக்குவியலுக்கு ஆதார நிலை விதைக்குவியலுக்கு வெள்ளை நிற சான்றட்டைகள் (கட்டணம் ரூ.5/அட்டை) மற்றும் சான்று நிலை விதைக்குவியலுக்கு நீலநிற சான்றட்டைகள் (ரூ.4/அட்டை) வழங்கப்பட்டு, விதைச்சான்று விபரங்களை அச்சிடப்பட்டு, உற்பத்தியாளர் விபர அட்டையுடன் விதைக்கொள்கலன்களுக்கு சான்றட்டை பொருத்தப்பட்டு தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்க தயாராகிறது.

எனவே, அனைத்து விவசாயிகளும் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் எனவும், சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்வதன் மூலம் அதிக வருமானம் ஈட்டு முடியும் கோவை மாவட்ட விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர், பி.ஆ.மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

## வேளாண் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு அக்ரிஸ்டாக் பதிவு செய்ய உதவி




இராமநாதபுரம், பிப்.26

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே உள்ள சம்பக்குளம், நகரத்தார் குறிச்சி, பெரியானைக்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு அக்ரிஸ்டாக் பதிவு செய்யும் பணி உதவி வேளாண் இயக்குநர், சிவராணி தலைமையில் நடைபெற்று வருகிறது. இந்நிகழ்வில் கமுதியில் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி மேற்கொண்டு வரும் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவிகள் கலந்து கொண்டு அக்ரிஸ்டாக் பதிவு செய்ய உதவி செய்தனர். இதில் உதவி தோட்டக்கலை அலுவலர் கோபிநாதனும் கலந்து கொண்டார்.

# எள் சாகுபடி செய்யும் விவசாயிகள் விதை பரிசோதனை செய்வது அவசியம்

திருவண்ணாமலை, பிப்.26

திருவண்ணாமலை மாவட்டத்தில் இயங்கி வரும் விதைச் சான்று துறையினால் சான்றளிக்கப்பட்ட சான்று அட்டை பொருந்திய விதைகளை பயன்படுத்த வேண்டும். தற்போது எள் சாகுபடி செய்ய ஏற்ற மாசி பட்டம் உள்ளதால் விவசாயிகள் எள் விதைகளை விதைப்பதற்கு முன்பு, விதைகளின் ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் முளைப்புத்திறன் பரிசோதனை செய்து அதன் பின் விதைப்பு செய்வதன் மூலம் கூடுதல் மகசூல் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும். மேலும் எள் விதைகளில் ஈரப்பதம் 9% விட அதிகமாக இருந்தால் முளைப்புத்திறன் 80%லிருந்து குறைந்து இருக்க வாய்ப்புள்ளது.




விதைப்பரிசோதனை செய்வதன் மூலம் விதையின் ஈரப்பதம் சரியாக உள்ளதா என பரிசோதிக்கலாம். எனவே தங்களிடம் உள்ள எள் விதைகளை பரிசோதனைக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட சீட்டு மற்றும் விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/- வீதம் விதைப் பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண் அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை முகவரிக்கு அனுப்பிட வேண்டும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# கோடையில் கம்பு சாகுபடி செய்வது எப்படி?



அதிகமாக பயிரிடப்படும் சிறு தானியங்களில் கம்பு முதலிடம் வகிக்கிறது. கம்பின் அறிவியல் பெயர் PENNISETUM GLAUCUM. கம்புவின் தாயகமாக ஆப்பிரிக்கா கண்டமாக கருதப் படுகிறது. ஏறத்தாழ 40க்கு மேற்பட்ட நாடுகளில் பயிரிடப்படுகிறது. கம்பு மனிதர்களுக்கு உணவாகவும் கால்நடைகளுக்கு தீவனமாகவும் எரி பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

வேறு எந்த தானியத்தில் இல்லாத அளவுக்கு 5% எண்ணெய் சத்து (OIL CONTENT) கம்பில் உள்ளதாக தரவுகள் கூறுகின்றன. இந்த எண்ணெயில் 70% பலபடி நிறைவுறாக் கொழுப்பு அமிலம் உள்ளது. இது மனித உடலுக்கு எற்றதாகும்.




### சாகுபடி தொழில்நுட்பங்கள்

பொதுவாக கம்பு மானாவாரியாகவும், இறவையிலும் பயிரிடப் படுகிறது. அதுவும் கோடையிலே பிப்ரவரி – மார்ச் மாதங்களில் கம்பு இறவையில் பயிரிடப்படுகிறது.

### இரகங்கள்

கோ 7, ICMS 7703, கே.எம்.2, ICMV 221, மற்றும் தனசக்தி.

### விதையளவு

ஏக்கருக்கு 2 கிலோ

## விதை நேர்த்தி

வறட்சியை தாங்கி வளர பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் 20 கிராம் / ஒரு லிட்டர் நீரில் கலந்து 6 மணி நேரம் ஊற வைத்து பின்பு நிழலில் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும்.

## உர அளவு

நன்றாக மக்கிய தொழு உரம் 5 டன் ஏக்கருக்கு NPK 36:18:18 பரிந்துரைபடி அடியுரமாக 50% தழைசத்துயுடன் முழுமையாக பரிந்துரைக்கப்பட்டபடி மணி மற்றும் சாம்பல் சத்துகளை இடவேண்டும். நுண்ணூட்ட உரமாக மில்ட் மிக்ஸர் 5 கிலோ விதைப்பதற்கு முன்னதாக இட்டு பரிந்துரைக்கப்பட்ட இடைவெளியில் கம்பு விதைகள் / கம்பு நாற்றுகளை நடவேண்டும்.

## களை நிர்வாகம்

விதைத்த / நட்ட 3-5 நாளில் அட்ரசின் களைக்கொல்லியை பயன்படுத்தலாம். களைக்கொல்லி பயன்படுத்த முடியாத பட்சத்தில் இரு முறை களை எடுக்க வேண்டும். 20,40வது நாளில் எடுக்க வேண்டும். மேலுரமிடுதல் களை எடுத்த பின்பு 50% தழைசத்தை இரு தவணையில் பிரித்து இடவேண்டும்.

## பயிர் பாதுகாப்பு

கம்பில் பயிர் பாதுகாப்பு மற்ற பயிர்களை விடக்குறைவு தான். பொருளாதார சேத நிலை அறிந்து பயிர் பாதுகாப்பு மேற்கொள்ள வேண்டும். அந்த காலத்துல பெரும்பாலான கிராமப்புற வீடுகளில் கம்பங் கஞ்சியும் கேப்பை கூலும் தான். இந்த இரண்டையும் சாப்பிட்டு வந்தனர். அதன் விளைவாக சர்க்கரை நோயின்றி நீண்ட காலம் வாழ்ந்தனர். இன்றைய உணவு பழக்க கலாச்சாரத்தில் நாம் கம்பு போன்ற சிறு தானியங்களை மறந்து விட்டோம். அழிந்த போன நிலையில் இன்று சிறு தானியங்கள் நாடெங்கும் பயிரிடப்படுகிறது.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயல்பாடுகளை அறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.26

நாமக்கல் மாவட்டம், தொட்டியம் வட்டாரத்தில் பி.ஜி.பி வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கிராமபுற விவசாயப்பணி அனுபவ திட்டம் (RAWE) மேற்கொண்டு வருகிறார்கள்.

இத்திட்டத்தின் கீழ் பங்களித்த மாணவர்கள் இன்றைய தினம், தொட்டியத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் வி.தேக்கனை சந்தித்து, அவர்களிடம் எந்தெந்த கிராமங்களில் இக்கூட்டுறவு கடன் சங்கம் பயனுள்ள தாக இருப்பதை அரிந்துக் கொண்டனர்.

மேலும் அவர்கள் அங்குக்கடன் பெறும் விவசாயிகள், கடன் பெறாத விவசாயிகள் பட்டியலையும், அந்த விவசாயிகள் எந்த சாகுபடி பயிருக்காக கடன் பெறுகின்றார்கள் என்ற விவரங் களையும் கேட்டுத் தெரிந்துக்கொண்டனர். மேலும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் சார்பாக எந்தெந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அதற்காக பெறப்படும் ஆவணங்களளின் விவரத்தையும் அறிந்துக் கொண்டனர். இவைகளோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உள்ள உரம் இருப்பு மற்றும் அதன் விவரங்களை அறிந்துக் கொண்டு, அதன் மூலம் விவசாயி களுக்கு எந்தெந்த சாகுபடி பயிர்களுக்கு அதற்குரிய உரங் களும், உரிய மாதங்கள் மற்றும் பருவகக்காலத்திற்கு ஏற்ப பயிரின் பல்வேறு நிலைகளையும் கேட்டு அறிந்துக் கொண்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் பற்றிய முழுமையான செயல்பாட்டினைக் கேட்டுத் தெரிந்துக் கொண்டனர். இக்கல்லூரி மாணவர்கள் 3 மாத காலம் தொட்டியம் பகுதி கிராமங்களில் தங்கி அனுபவ பயிற்சி மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# குறைந்த செலவில் நல்ல வருமானம் தரும் மிதி பாகற்காய் (குருவித்தலைப் பாகல்) சாகுபடி



ஒரு கொடியை தூக்கத் தூக்க ஓராயிரம் பாவக்காய் என்று கிராமங்களில் சொல்வார்கள். அப்படி கொத்தாகக் காய்க்கக் கூடியது பாகற்காய்.' இலைமறைவு காய் மறைவு' என்ற பழமொழி பாகற்காய்க்கு மிகவும் பொருந்தும். பந்தல் செலவுகளுக்குப் பயந்தே, பாகற்காய் உள்ளிட்ட பந்தல் சாகுபடி பக்கம் செல்வதை பெரும்பாலான விவசாயிகள் விரும்புவதில்லை. ஆனால் மிதிபாகற்காய்க்கு பந்தல் தேவையில்லை. சம்பா சாகுபடி நெல் அறுவடைக்குப் பிறகு வயலில் பாகற்காயை விதைப்பு செய்யப்படுகிறது. பாகற்காய் வெப்பப்பிரதேச காய். தென்கிழக்கு ஆசியா இதன் பிறப்பிடம் என்கிறார்கள். அமேசான் காடுகள், கிழக்கு ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா போன்ற நாடுகளும் பாகற்காய் வளர சிறந்த இடங்களாகும்.

ஆசியர்கள் மிக அதிகமாக சாப்பிடும் உணவு இது. சீனர்கள் பழங்காலத்திலிருந்தே பாகற்காய் சாப்பிட்டு வந்தனர். சீன மொழியில் ஷான்-கூ-குவா என்று பெயர். முதலில் இது தன்னிச்சையாக வளர்ந்து கிடந்தது. வறட்சி காலத்தில் வேறு உணவு கிடைக்காத போது இதை உண்டனர். கி.பி 1400-ல் சீனர்கள் இதைப்பற்றி எழுதியுள்ளனர்.

முதலில் முட்டை அளவு இருந்தது. 200 வருடங்களுக்குப் பிறகு பல்வேறு ஆராய்ச்சிகள் மூலம் 6லிருந்து 8 இஞ்ச் நீளமுள்ள பாகற்காயை சாகுபடி செய்தனர். இப்போதெல்லாம் ஒரு அடி நீளத்திலும் வளர்கிறது. மிதிபாகற்காய்க்கு எப்போதுமே மக்களிடம் மவுசு அதிகம் தான். மருத்துவக்குணம் நிறைந்த இந்த பாகற்காய் நீரிழிவு நோய், ரத்தத்தை சுத்திகரித்தல் உள்ளிட்ட பல்வேறு உடல் கோளாறுகளுக்கு மருந்தாக இருக்கிறது. அதிலும் குறைந்த அளவிலானவர்களே இதை உற்பத்தி செய்வதால். தேவைக்கு ஏற்ப கிடைப்பதில்லை. இதனால், இதன் விலை எப்போதுமே உச்சத்தில்தான் இருக்கும். புவனகிரி அருகே உள்ள ஆலம்பாடி, பூதவராயன்பேட்டை, தெற்கு திட்டை, வத்தராயன்தெத்து உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது

## பயிரிடுவதற்கு ஏற்ற காலநிலை மற்றும் மண்வளம்

இது ஒரு வெப்ப மற்றும் துணை வெப்பமண்டல பருவ பயிர் ஆகும், வறட்சி மற்றும் கோடை காலத்திலும் சாகுபடி செய்யப் படுகிறது. மேலும் சற்று குளிர்ந்த வெப்பநிலையிலும், அதிக மழைப்பொழிவு பகுதிகளிலும் கூட பொறுத்துக்கொள்ள முடியும். இருப்பினும், குறைந்த வெப்பநிலை அதன் வளர்ச்சியை எதிர்மறையாக பாதிக்கும். பாகற்காய் வளர்ச்சி மற்றும் பூப்பதற்கு உகந்த வெப்பநிலை 25-30 டிகிரி செல்சியஸ் ஆகும், மேலும் 35 டிகிரி செல்சியணீக்கு மேல் வெப்பநிலையானது பழங்கள், தாவர வளர்ச்சி மற்றும் பெண் பூக்களின் உற்பத்தியை பாதிக்க லாம். பாகற்காய் விதைகள் முளைப்பதற்கு 18 டிகிரி மேல் வெப்பநிலை தேவை. மணல் பாங்கான வடிகால் வசதியோடு இருக்கும் எல்லா மண் வகைகளும் இதற்கு ஏற்றது. களிமண் மற்றும் ஆற்றுப் படுகைகளை ஒட்டிய வண்டல் மண்ணும் பாகற்காய்க்கு ஏற்றது. மண்ணின் காரத்தன்மை 6.0-7.0 க்குள் இருக்க வேண்டும்.

## பயிரிடுவதற்கு ஏற்ற பருவம்

மிதிபாகற்காயைச் சாகுபடி செய்ய சித்திரை மற்றும் வைகாசி பட்டம்தான் சிறந்தது. 'சம்பா பருவத்தில் நெல் அறுவடை முடிந்த பிறகு அந்த நிலத்தில் பாகற்காய் விதையை விதைத்து விவசாயம் செய்யப்படுகிறது.

## விதை அளவு

விதை 1.5 கிலோலிருந்து 2.5 கிலோ வரை நடவு செய்ய தேவைப்படும்.

## நிலத்தை தயார் செய்தல் மற்றும் நடவு முறை

நடவுக்கு முன் நிலத்தை நன்கு உழவு போட்டு, பின்னர் மூன்றடி இடைவெளியில், இரண்டு அடி அகலத்தில், 15 அடி நீள பார் அமைக்க வேண்டும். இரண்டு பாருக்கும் இடையிலான மூன்று அடி இடைவெளி நிலத்தில் தான் விதைக்க வேண்டும். அதாவது, அரை அடி இடைவெளியில் குழிகளை எடுத்து, ஒரு கைப்பிடி அளவு எருவைப் போட்டு மூடி, குழிக்கு ஐந்து விதைகள் வீதம் ஊன்றினால் போதும். 100 குழி (சுமார் 33 சென்ட்) நிலத்துக்கு ஒரு கிலோ விதை தேவைப்படும். ஏழாவது நாளில் முளை வரும். 15 முதல் 20 நாட்களில் செடியைச் சுற்றி இருக்கும் களைகளை அகற்றிவிட்டு, குழிக்கு 50 கிராம் டி.ஏ.பி.

உரத்தை வைத்து தண்ணீர் கட்டவேண்டும். 25ம் நாளில் இருந்து கொடி படர ஆரம்பிக்கும். 35ம் நாளுக்குள்ளாக பூ எடுக்கும். அந்தச் சமயத்தில் கொடியின் வளர்ச்சிக்காக ஏழு கிலோ யூரியா, ஏழு கிலோ பொட்டாஸ் கலந்து, கொடிகளின் வேர் பகுதிகளில் கொஞ்சம் கொஞ்சமாக கொடுக்க வேண்டும் (நான்கு விரல்களால் அள்ளி வைப்பது). பாகல் கொடியில் காய் எடுக்க ஆரம்பித்ததுமே... கடலைப் பிண்ணாக்கு கொடுத்தால், வளர்ச்சிக்குத் தேவையானச் சத்துகள் கிடைத்துவிடும். 45 முதல் 50ம் நாளில் அறுவடை ஆரம்பமாகிவிடும். அதிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு தடவை பத்து கிலோ யூரியா, பத்து கிலோ பொட்டாஸ் கலந்து, தூருக்குத் தூர் கொஞ்சம் வைத்து தண்ணீர் கட்டவேண்டும். நிலத்தின் தன்மையைப் பொருத்து 7 முதல் 10 நாள் இடைவெளியில் தண்ணீர் கட்டினால் போதும்.

## பூச்சி மேலாண்மை

அசுவினி, பச்சைப் புழு ஆகியவற்றின் தாக்குதல் தான் அதிகமாக இருக்கும். பத்து லிட்டர் டேங்க் ஒன்றுக்கு, 25 மில்லி வீதம் டைமெத்தேட் மருந்தினைக் கலந்து தெளித்தால் போதும் (100 குழி நிலத்துக்கு 4 டேங்க்). இயற்கையான முறையில் அசுவினி, பச்சைப் புழு, தண்டுத் துளைப்பான் இவற்றைத் தடுக்க, வேப்பங்கொட்டை, பூண்டு, புகையிலை கலந்த கரை சலை அடித்தாலே போதும். டேங்குக்கு (பத்து லிட்டர்), புகையிலைக் கரைசல் ஒரு லிட்டர், காதி சோப் (100 கிராம்) கரைசல், ஆகியவற்றுடன் தண்ணீர் கலந்து தெளித்தாலே பூச்சிகளைக் கட்டுப்படுத்தி விடலாம். இந்தக் கரைசலை மாலை வேளையில் தெளிப்பதுதான் நல்லது.

## அறுவடை முதல் விற்பனை வரை

நடவு செய்த நாளிலிருந்து 40 நாட்களுக்குப் பிறகு மிதி பாகற்காய் பறிப்புக்கு வந்துவிடும். முதல் பறிப்பைத் தொடர்ந்து, ஐந்து நாள் இடைவெளியில் காய் பறிக்கலாம். அதாவது, 50ம் நாள் தொடங்கி, 140ம் நாள் வரை 18 தடவை காய் பறிக்கலாம். ஒரு தடவைக்குச் சரியாக 100 கிலோ காய் கிடைக்கும். மொத்தம் 1,800 கிலோ கிடைக்கும். மிதி பாகற்காய் தொடர்ச்சியாக ஆறு மாதம் வரை அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரில் குறைந்த பட்சம் 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை லாபம் தருகிறது. நெல்லைவிட அதிக லாபம் தருவதால் இதனை அனைவரும் விரும்பி பயிர் செய்து வருகிறார்கள்.



இப்பகுதியில் விளையும் மிதி பாகற்காய் சிதம்பரம், புவனகிரி, சேத்தியாத்தோப்பு, வடலூர், குறிஞ்சிப்பாடி மற்றும் தமிழகத்தின் பல இடங்களுக்கும் விற்பனைக்கு வியாபாரிகள் வாங்கி சென்று விற்பனை செய்து வருகிறார்கள். கிலோ ரூ.40லிருந்து ரூ.50 வரை விற்பனையாகிறது.

தகவல் : **தோட்டக்கலை துறை உதவி பேராசிரியர் ஜே.பிரபு மற்றும் பேராசிரியர் அ.மகாதேவன், பாலாறு வேளாண்மை கல்லூரி, கொத்தமாரிகுப்பம், மேல்பட்டி, வேலூர்– 635 805.**

# செம்பரை கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு வேளாண் மாணவர்களின் பயிற்சி



திருச்சி, பிப்.26

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி பகுதியில் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் தங்கிப் பயிற்சி பெறும் எம்.ஆர்.பாளை–யத்தைச் சேர்ந்த நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களான வி.அபிதரன், த.தேவா, மா.க.எழிலரசன், க.பரத், ந.தீபன் ராஜ், சி.தினேஷ் குமார், தி. ஞானவேல், மு.குரு பிரசாத், ரா.ஹனீப் முஹம்மது, பி. ஹரிஸ்ரீ மற்றும் ம.இள.இளங்குமரன் ஆகியோர் விவசாயிகளுக்கு 'உழவன் செயலி' பற்றி விரிவாக எடுத்துரைத்தனர்.

இதில், அரசு அளிக்கும் வேளாண் தொழில்நுட்ப பயிற்சி, வேளாண் கல்விச் சுற்றுலாவில் பங்கேற்க முன்பதிவு செய்வதற்கான வழிமுறைகள், விவசாய மானியங்களை பெறும் வழிமுறைகள், விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் கொள்முதல் செய்யும் வழிமுறைகள் பற்றி தெளிவாக எடுத்துரைத்து பயிற்சி வழங்கினர்.

# விவசாயிகளிடமிருந்து விளைபொருட்களை எப்படி கொள்முதல் (வாங்க) வேண்டும்? தெரியுமா?



விருதுநகர், பிப்.26

தற்போது எங்கு பார்த்தாலும் அறுவடை சீசன் முடியும் தருவாயில் உள்ளது. சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் கம்பெனி லிமிடெட் (FPO) மூலமாக தங்களுடைய பங்குதாரர்கள் (விவசாயி களிடம்) நிலக்கடலை மற்றும் மக்காசோளம் பாரம்பரிய நெல் ரகங்களான கருப்பு கவுணி, தூய மல்லி கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது. பொதுவாக FPOவின் முக்கிய நோக்கமே விளைபொருளை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து அதனை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்வதே தான்.

அந்த வகையில் அக்ரி கிளினிக்-ன் வேளாண் ஆலோசகர் சந்திர சேகரன், 25.2.25 அன்று குறவைகுள விவசாயி களிடத்தில் தங்களுடைய விளைப்பொருளை (நிலக்கடலை) எப்படி உலர வைத்து விற்பனைக்கு கொண்டு வரும் உத்திகளை எடுத்து கூறுகையில், அறுவடையின் போது நிலக்கடலை பருப்பில் கிட்டத்தட்ட 35-40% ஈரப்பதம் இருக்கும். காய்களை நன்றாக வெயிலில் 2/3 நாட்களில் நன்கு வெயிலில் உலர்த்த வேண்டும். அவ்வப்போது காய்ந்து கொண்டு இருக்கும் நிலக்கடலை கிளறி விட வேண்டும். காய்களில் (பருப்பு) 12% ஈரப்பதம் வரும் வரை காய வைக்க வேண்டும். (இதை விதைக்காக பயன்படுத்தினால் ஈரப்பதம் 6-7% இருக்க வேண்டும்).

கிராமப்புறங்களில் MOISTURE METER இல்லாத இடங்களில் நம்முடைய பாரம்பரிய முறைபடி பருப்பை பல்லில் கடித்துப் பார்த்து காய்ச்சலை தெரிந்து கொள்ளலாம்.

நிலக்கடலை குலுக்கி பார்த்தால் சப்தம் வந்தால் நன்றாக காய்ந்து விட்டதாக அர்த்தம். அல்லது இரண்டு விரல்களுக்கு இடையில் வைத்து நசுக்கும் போது தோல் எளிதாக உறிந்தால் சரியான காய்ச்சலுக்கு அடையாளமாக இருக்கென கூறினார். இவ்வாறாக உலர்த்தி காய்களை நல்ல கோணி (சாக்குபைகளில்)

சேமித்து வைக்க வேண்டும். தரையின் மீது மூட்டைகளை அடுக்கி வைக்கக் கூடாது. மரக்கட்டை / பலகை மீது அடிக்க வைக்க வேண்டும். சுவர் ஓரங்களின் மீது வைக்காமல் இடம் விட்டு வைக்க வேண்டும் என்றார். சேமிப்பு இடம் காற்றோட்டமாக இருக்க வேண்டுமென கூறினார். இந்த கலந்துரையாடலில் குறவைக்குளம் கடலை விவசாயிகளான பழனி, ராமர், பழனி வேல், பழனிக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். தரமற்ற பொருளை எக்காரணம் கொண்டு வாங்கிட கூடாது. விவசாயி களுக்கு தங்களுடைய பொருளை தரமாக விற்பனை செய்தால் கூடுதலான விலை கிடைக்கும்.

நிலைக்கடலையை எண்ணெய் தயாரிக்கவும், கடலை மிட்டாய் தயாரிக்கவும், மக்காசோளத்தை கோழித் தீவனத்திற்காகவும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி சேவையூர் பாரம்பரிய




பயிர் உற்பத்தியாளர் நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. இந்த ய்ணைநுசிசிடி யின் அங்கமாக செயல்படுவதுடன் சிசிடி செயல் இயக்குநர் பத்மாவதி, திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோ வழிகாட்டுதலின் பேரில் ய்ணைநுசெயல் அலுவலர் பார்த்த சாரதி தலைமையில் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் தற்போது கோடை பருவத்திற்கான விதைகள், உரங்கள் பயிர்பாதுகாப்பு மருந்துகள் அனைத்தும் சேவையூர் அக்ரி கிளினிக்–ல் விற்பனை செய்யப்படுவதாக கூறினார். மேலும் விளை பொருள் கொள்முதல் பணி மும்முரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான ஏற்பாடுகளை கள பணியாளர்கள் பரதன், பிரியா சிறப்பாக செய்து வருகின்றனர்.

மேலும் களப்பணியாளர்களுக்கு வரும் வாரம் முதல் தொழில்நுட்ப பயிற்சி (விதை முதல் விற்பனை) வரை நடைபெற போவதாக வேளாண் ஆலோசகர் தெரிவித்தார்.

# விவசாயிகளை ஊக்குவிக்க பயிர் விளைச்சல் போட்டி



நாமக்கல், பிப்.26

விவசாயிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில், தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் பயிர் விளைச்சல் போட்டிகளை நடத்துகிறது.

இந்தப் போட்டிகள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் நடத்தப்படுகின்றன. இதன் அடிப்படையில் நாமக்கல் மாவட்டம்,




முள்ளுகுறிச்சி பகுதியில் உள்ள கொலக்கமேட்டில் சாமை பயிர் விளைச்சல் போட்டி மாநில அளவில் நடைபெற்றது.

இப்போட்டி வேளாண்மை இணை இயக்குனர் மற்றும் துணை இயக்குனர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் பிஜிபி வேளாண் கல்லூரி மாணவிகள் பெரும்பங்கு வகித்தனர். சாமை அறுவடை முதல் சாமை மூட்டைகளை எடை போடும் வரை மாணவிகள் உறுதுணையாக இருந்தனர்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அம்மூவருக்கும் பரிசு தொகை வழங்கப்படும். எனவே விவசாயிகளின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கில் போட்டி நடத்தப்பட்டது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# சூரிய ஒளிசக்தி பயன்பாடு குறித்த பயிற்சி



அரியலூர், பிப்.26

அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டாரத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயம் மற்றும் இதர துறைகளில் சூரியஒளி சக்தியை பயன்படுத்துதல் பற்றிய பயிற்சி வெற்றியூர் கிராமத்தில் நடைபெற்றது. இப்பயிற்சிக்கு மாவட்ட மேலாண்மை இணை இயக்குனர் கீதா தலைமை வகித்து உரையாற்றுகையில் வேளாண்மை துறையில் உள்ள பல்வேறு திட்டங்கள் மற்றும் விவசாயிகளின் நில உடமை பதிவுகள் சரிபார்த்தல் முகாமை பற்றி விளக்கமாக எடுத்துரைத்து அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் வேளாண்மை துணை இயக்குனர் கணேசன் சிறப்புரையாற்றுகையில் சூரிய சக்தியில் இயங்கும் மின்

மோட்டார்கள் பெற உதவும் அரசு திட்டங்கள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் சிறுதானியங்கள் சாகுபடியின் அவசியம் குறித்து கூறினார். திருமானூர் வேளாண்மை உதவி இயக்குனர் பரமசிவம், வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் இடுபொருட்கள் குறித்து எடுத்துரைத்து அதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள கேட்டு கொண்டார். கிரியா வேளாண் அறிவியல் மையம் தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா, சூரிய சக்தி என்றால் என்ன விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த துறைகளில் பயன்பாடு மற்றும் அதற்கான மானிய திட்டங்கள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்து, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி அலுவலர் பழனிவேல், விவசாயிகளுக்கு

திட்டங்கள் பற்றிய சந்தேகங்களை கேட்டு ஆலோசனை வழங்கினார். இப்பயிற்சியில் வெற்றி கிராமத்தைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள், மகளிர் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இப்பயிற்சிக்கு அட்மா திட்ட பணியாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# விவசாயிகளுக்கு வேளாண் அடுக்கக திட்டத்தில் பதிவு செய்ய உதவிய வேளாண் கல்லூரி மாணவிகள்



விருதுநகர், பிப்.26

விருதுநகர் மாவட்டத்திலுள்ள குருந்த மடம், வதுவார்பட்டி, போடம்பட்டி, இராமலிங்கபுரம், பெரிய தும்மங்குண்டு, சின்னஞ் செட்டிப்பட்டி, செம்பட்டி, பெரிய புளியம்பட்டி ஆகிய கிராமங்களில் நம்மாழ்வார் வேளாண் கல்லூரி இறுதியாண்டு பயிலும் மாணவிகள் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவி வேளாண் அலுவலர் ஆகியோரின் உதவியுடன் ஆறு குழுக்களாக பிரிந்து, ஊரக வேளாண் அனுபவ பயிற்சி மூலம் வேளாண் அடுக்கக திட்டத்தில் (Agri Stack) விவசாயிகளுக்கு இணையதளத்தின் மூலம் பதிவு செய்து கொண்டு வருகின்றனர். இத்திட்டம் அரசின் மானிய திட்டங்கள் மற்றும் பலன்களை விவசாயிகள் எளிதாக பெற ஒரு தனிப்பட்ட அடையாள எண்ணைப் பெற உதவுகிறது.



# இயற்கை வேளாண்மை பயிற்சி

கிருஷ்ணகிரி வட்டாரம், தேவசமுத்திரம் கிராமத்தில் வேளாண்மைத்துறை மற்றும் சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை இணைந்து இயற்கை வேளாண்மை குறித்தும் அட்மா திட்டத்தின் மூலம் நுண்ணீர் பாசன கருவிகள் பராமரிப்பு குறித்தும் ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு தலைமை தாங்கிய வேளாண்மை இணை இயக்குநர் கிருஷ்ணகிரி பச்சையப்பன், பருவநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய பயிர் சேத பாதிப்பு குறித்தும் அதன் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேலாண்மை முறைகள் பற்றியும் விளக்கினார். மேலும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் பாதிப்பிற்கு காப்பீடு செய்வதன் அவசியத்தை விளக்கினார்.

மேலும் பயிற்சியாளராக கலந்துக் கொண்ட பையூர் தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிலையம் இணை பேராசிரியர் கிருஷ்ணவேணி, இயற்கை வேளாண்மையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள் அதன் வழிமுறைகளையும் விளக்கினார். மேலும் பூச்சி விரட்டி தயாரிப்பு செயல்விளக்கமும் செய்து காண்பித்தார். தொடர்ந்து பயிற்சியளித்த கிருஷ்ணகிரி, வேளாண்மை அறிவியல் மைய விரிவாக்கத்துறை தொழில்நுட்ப வல்லுநர் செந்தில்குமார், இயற்கை வேளாண்மையில் ஒருங்கிணைந்த ஊர மேலாண்மை முறைகளில் பஞ்சகாவியா, ஜீவாமிர்தம், தேமோர் கரைசல், மீன் அமிலம் ஆகிய தயாரிப்பு குறித்தும் பஞ்சகாவியா செயல்விளக்கவும் செய்து காண்பித்தார். நுண்ணீர் பாசன கருவிகள் பராமரிப்பு (அமில முறை) குறித்த செயல்விளக்கம் வேதாந்த சொட்டுநீர் பாசன நிறுவனத்தின் மூலமாக செய்து காண்பிக்கப்பட்டது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) கலா, உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் சுருதி, வட்டார வேளாண்மை அலுவலர்கள் பிரியா, எலிசபெத், வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் ராமகவுண்டர் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் மற்றும் வேலூர் பாலார் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721